## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

### அசல் வழக்கு எண். 121 / 2020

2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள் செவ்வாய் கிழமை இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.K.சித்ரா, B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), பல்லடம் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சாட்சி | : | வா.சா.1 |
| பெயர் | : | கோவிந்தராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | மோகனசுந்தரம் |
| வயது | : | 32 |
| சமயம் | : | இந்து |
| தொழில் | : | |
| கிராமம் | : | சித்தம்பலம் |
| வட்டம் | : | பல்லடம் |

**முதல் விசாரணை 13.12.2022**

நான் இந்த வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

1. 29.10.2019 தேதியிட்ட கொடை ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1,
2. 16.09.1966 தேதியிட்ட பாக சாசனத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2,
3. 11.06.2020 தேதியிட்ட சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.3,
4. 30.09.2020 தேதியிட்ட அடங்கல் கணினி நகல் வா.சா.ஆ.4,
5. 04.12.2019 தேதியிட்ட தாவா சொத்திற்கான வரி ரசீது வா.சா-ஆ.5,
6. 04.02.2020 தேதியிட்ட தாவா சொத்திற்கான புல வரைபடம் வா.சா.ஆ-6,
7. 26.01.2020 தேதியிட்ட பல்லடம் காவல்நிலையத்தில் புகார் செய்ததன் அலுவலக நகல் வா.சா.ஆ.7,

8. 03.02.2020 தேதியிட்ட காவல் துயைினர் வழங்கிய ரசீது வா.சா-ஆ.8,

9. 15.02.2020 தேதியிட்ட காவல் ஆய்வாளர் அனுப்பிய அறிவிப்பு வா.சா.-ஆ.9,

10. 09.03.2020 தேதியிட்ட கம்பி வேலியை சேதப்படுத்தியதற்கான வர்ணப்புகைப்படம் வா.சா.ஆ.10,

11. 09.03.2020 தேதியிட்ட வர்ணப்புகைப்படத்திற்கான தொகை ரசீது வா.சா.ஆ.11

ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தோன்றா தரப்பினராக இருப்பதால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2022.12.13 18:49:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),

பல்லடம்.